செ.வெ.எண்: 76/ ஜுன் /2020 நாள்:27.06.2020

**திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் ஜமாபந்தி பசலி ஆண்டு 1429 (2019 – 2020) ஆம் ஆண்டுக்கான மனுக்கள் ஜமாபந்தி ரத்து செய்யப்படுகிறது.**

**கோரிக்கை தொடர்பான மனுக்களை தாங்களாகவே https://gdp.tn.gov.in/jamabandhi என்ற இணையதளம் அல்லது இ-சேவை மையங்கள் மூலமாக 29.06.2020 முதல் 15.07.2020 வரை பதிவேற்றம் செய்து கொள்ளலாம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு,இ.ஆ.ப.,அவர்கள் அறிவிப்பு.**

------

இது குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

கோவிட்-19 நோய்த் தொற்றை கட்டுப்படுத்தும் வகையில் தமிழகத்தில் 30.06.2020 வரை குற்றவியல் நடைமுறைச்சட்டம் 144-ன் கீழ் தடை உத்தரவு நீட்டிக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் அரசாணை நிலை எண்:306 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை(வ.நி(3)(2)) துறை நாள்:17.06.2020-ன் படி திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பசலி ஆண்டு 1429 (2019-2020)-க்கான மனுக்கள் ஜமாபந்தி ரத்து செய்யப்படுகிறது. பொதுமக்கள் ஜமாபந்தி தொடர்பான கோரிக்கை மனுக்களுடன் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு நேரில் வரவேண்டாம் எனவும், கோரிக்கை தொடர்பான மனுக்களை தாங்களாகவே https://gdp.tn.gov.in/jamabandhi என்ற இணையதளம் அல்லது இ-சேவை மையங்கள் மூலமாக 29.06.2020 முதல் 15.07.2020 வரை பதிவேற்றம் செய்து கொள்ளலாம் எனவும், பதிவேற்றம் செய்யப்படும் மனுக்கள் உரிய முறையில் பரிசீலனை செய்யப்பட்டு மனுதாரர்களுக்கு தகவல் வழங்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு:**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்**
**திருச்சிராப்பள்ளி**